RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 244 | செப்டம்பர்.5 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## அறவழியில் போராடிய அரசு மருத்துவர் சங்க தலைவரை பழிவாங்க கூடாது: அன்புமணி வலியுறுத்தல்

சென்னை, செப்.05-

கோரிக்கைகளுக்காக அறவழியில் போராடிய அரசு மருத்துவர் சங்க தலைவரை பணியிட மாற்றம் செய்து பழிவாங்கக் கூடாது என்று, பாமக தலைவர் அன்புமணி, அரசு மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

இது தொடர்பாக, பாமக தலைவர் அன்புமணி நேற்று வெளியிட்ட அறிக்கை: தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள், செவிலியர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். மத்திய அரசு மருத்துவர்களுக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, சேலம் மாவட்டம் மேட்டூர் முதல் சென்னை கலைஞர் நினைவிடம் வரை அரசு மருத்துவர்களுக்கான சட்டப் போராட்டக் குழுவினர் நடைபயணம் மேற்கொண்டனர்.



இதற்காக, குழுவின் தலைவர் மருத்துவர் பெருமாள் பிள்ளையை சென்னையிலிருந்து நாகப்பட்டினம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதும், அவருக்கு குற்ற குறிப்பாணை 17பி வழங்கப்பட்டிருப்பதும் கண்டிக்கத்தக்கவை. அரசு மருத்துவர்களின் கோரிக்கைகள் மிகவும் நியாயமானவை. அவற்றை நிறைவேற்றுவதற்கு பதிலாக அவற்றுக்காக குரல் கொடுக்கும் மருத்துவர்களை பழிவாங்குவது நியாயமல்ல. இந்த நடவடிக்கைகளை கைவிட வேண்டும்.

அரசு மருத்துவர்களின் நியாயமான கோரிக்கைகள் அனைத்தையும் உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். மருத்துவர் பெருமாள் பிள்ளை மீதான பழிவாங்கும் நடவடிக்கையை ரத்து செய்ய வேண்டும் என்று அரசு மருத்துவர்கள் மற்றும் பட்டமேற்படிப்பு மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் சாமிநாதன், பொதுச்செயலாளர் ராமலிங்கம், சமூக சமத்துவத்துக்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் மருத்துவர் ஜி.ஆர்.ரவீந்திரநாத் ஆகியோர் தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளனர்.

இது தொடர்பாக, அரசு மருத்துவர்களிடம் கேட்டபோது, "அரசின் இந்த நடவடிக்கை 19 ஆயிரம் அரசு மருத்துவர்களுக்கும் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல வேதனையை ஏற்படுத்தி உள்ளது. மருத்துவர் பெருமாள் பிள்ளை மீதான நடவடிக்கையை ரத்து செய்ய வேண்டும். மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி கொண்டு வந்த அரசாணை 354ன்படி அரசு மருத்துவர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முதல்வர் நிறைவேற்ற வேண்டும்" என்றனர்.

## ஜெர்மனி பயணத்தை முடித்துக் கொண்டு லண்டன் சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு

சென்னை: செப்.5-

ஜெர்மனி பயணத்தை முடித்துக் கொண்டு இங்கிலாந்து தலைநகர் லண்டன் சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு, அங்குள்ள தமிழர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

தமிழகத்துக்கு முதலீடுகளை ஈர்ப்பதற்காக, ஒரு வார பயணமாக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஜெர்மனி, இங்கிலாந்து சென்றுள்ளார். கடந்த ஆக.30ம் தேதி முதல்வர் ஜெர்மனி புறப்பட்டுச் சென்றார். அவருடன் மனைவி துர்கா ஸ்டாலின் மற்றும் அதிகாரிகள் சென்றனர். ஜெர்மனியில் அமைச்சர் டிஆர்பி.ராஜா மற்றும் அங்குள்ள தூதரக அதிகாரிகள், தமிழர் குடும்பத்தினர் முதல்வரை வரவேற்றனர். தொடர்ந்து, தமிழகத்தில் முதலீடு செய்யுமாறு அங்குள்ள தமிழர்களுக்கு முதல்வர் அழைப்பு விடுத்தார்.



மேலும், 'டிஎன் ரைசிங் ஜெர்மனி' என்ற பெயரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதல்வர் ஸ்டாலின் பங்கேற்றார். இந்த முதலீட்டாளர்கள் மாநாட்டின் மூலம் ரூ.7,020 கோடி மதிப்பில் 26 ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதையடுத்து, கடந்த 2ம் தேதி ஜெர்மனி பயணத்தை முடித்துக் கொண்டு இங்கிலாந்து சென்றார். லண்டன் விமான நிலையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

தொடர்ந்து, முதல்வர் ஸ்டாலின் இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். இதற்கிடையில் ஜெர்மனி பயணம் மற்றும் இங்கிலாந்து சென்றடைந்தது குறித்து அவர் நேற்று வெளியிட்ட சமூக வலைதளப் பதிவுகளில் கூறியிருப்பதாவது:

முதல் பதிவில் "தமிழகத்தின் வளர்ச்சிப் பயணத்துக்கு ஐரோப்பிய பயணம் துணை நிற்கும். தமிழ் உறவுகள் அளித்த அன்பும், ஜெர்மனியில் ஈர்த்த முதலீடுகளும் கொடுத்துள்ள ஊக்கத்துடன் இங்கிலாந்து வந்தடைந்திருக்கிறேன். இந்தப் பயண அனுபவங்களை உடன் பிறப்புகளுடன் பகிர்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

மற்றொரு பதிவில் "இங்கிலாந்தில் கால் பதித்தேன். தொலைதூரக் கரைகளை கடந்து சென்றும், வீட்டில் இருப்பது போன்ற உணர்வை அளித்தது எனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு. அங்குள்ளவர்களால் அன்புடனும், பாசத்துடனும் அரவணைக்கப்பட்டேன்" என்று தெரிவித்துள்ளார்.

## மழைநீரை சேமிக்க ரூ.160 கோடி செலவில் சென்னையில் 70 குளங்கள் புனரமைப்பு, 88 மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைப்பு

சென்னை, செப்.05-

சென்னையில் மழைநீரை சேமிக்கும் வகையில் ரூ.159.08 கோடியில் 70 குளங்கள் புனரமைக்கப்பட்டு, 88 மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக்குறிப்பு: சென்னை மாநகராட்சியில் பருவமழையை முன்னிட்டு ஆறுகள், குளங்கள், கால்வாய்களை தூர்வாரி அதன் கட்டமைப்புகளை மேம்படுத்துதல், மழைநீர் வடிகால்வாய்களை அமைத்தல், மழைநீர் வடிகால்வாய்களில் தூர்வாரும் பணி உள்ளிட்டவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதே போல் குடியிருப்புப் பகுதிகளில் மழைநீர் தேங்குவதைத் தடுத்து அதைச் சேமிக்கும் வகையில் ஜெர்மன் தொழில்நுட்பத்தில் விளையாட்டு மைதானங்கள், பூங்காங்கள், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் 70 குளங்கள் ரூ.144.34 கோடியில் புனரமைக்கப்பட்டுள்ளன. பூங்காக்களில் தேங்கும் மழைநீரை முழுமையாக சேமிக்கும் வகையில் சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.14.74 கோடியில் 88 மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்திய சுற்றுச்சூழல் அறக்கட்டளை சார்பில் தென்சென்னை பகுதியில் 22 குளங்களில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், மேலும் புதிதாக 41 குளங்களில் ரூ.119.42 கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிண்டி ரேஸ் கிளப் வளாகத்தில்கடந்த ஆண்டில் 4 புதிய குளங்கள் அமைக்கப்பட்டு, அதன் கொள்ளளவை இரட்டிப்பாக்க பணிகள் நடந்து வருகின்றன.

இதற்கிடையே எம்.ஆர்.டி.எஸ். பகுதியில் சிக்ஸ் வென்ட் கல்வெர்ட் அருகில் கடந்த ஆண்டில் 2 குளங்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக பருவமழைக் காலங்களில் அதிக அளவில் மழைநீரை சேமித்து சாலை மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் மழைநீர் தேக்கத்தை தவிர்க்க முடியும். மழைநீரை நிலத்தடியில் சேமிக்கவும் சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## அறிவியல்பூர்வ அணுகுமுறையே நெரிசலுக்கு நிரந்தரத் தீர்வு

டெல்லி, செப்.05-

டெல்லி குர்கான் தேசிய நெடுஞ்சாலையில் சில தினங்களுக்கு முன் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசல் நாடு முழுவதும் உள்ள போக்குவரத்து பிரச்சனைகளுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை மணியாக அமைந்துள்ளது.



குர்கான் பகுதியில் 100 மி.மீட்டர் அளவில் 20 நிமிடம் பெய்த மழையை தாங்க முடியாமல் நெடுஞ்சாலையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதுடன், 25க்கும் மேற்பட்ட வாகனங்கள் சாலையின் நடுவிலேயே பழுதாகி நின்றதால் 20 கி.மீட்டர் தூரத்திற்கு வாகனங்கள் தேங்கி ஊர்ந்து செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. அரை மணி நேரத்தில் கடக்க வேண்டிய தூரத்தை வாகன ஓட்டிகள் 7 மணி நேரத்தில் கடந்து சென்ற பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது.

இதேபோன்று ஐதராபாத், பெங்களூரு போன்ற நகரங்களிலும் சிறு மழை பெய்தாலே மணிக்கணக்கில் சாலைகளில் வாகனங்கள் தேங்கி நிற்கும் காட்சி அரங்கேறி வருகிறது. பழுதடைந்த வாகனங்களை கிரேன் உதவியுடன் போக்குவரத்து காவலர்கள் அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டாலும் நிலைமை அவர்களது கைமீறிச் செல்லும்போது, போக்குவரத்து காவலர்கள் செய்வதறியாது ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கும் நிலையே ஏற்பட்டு விடுகிறது.

டெல்லி குர்கான் சாலை மேம்பாலத்தில் இரவு நேரத்தில் வாகனங்கள் தேங்கி நின்ற காட்சியை புகைப்படங்கள் மற்றும் காணொலி வாயிலாக சமூக வலைதளங்களில் பகிர்ந்துள்ளது உலகம் முழுக்க பரவி விமர்சனங்களுக்கு வித்திட்டுள்ளது. முன்பெல்லாம், சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளில் 20 கி.மீட்டருக்கு போக்குவரத்து நெரிசல், 40 கி.மீட்டருக்கு போக்குவரத்து நெரிசல் என்று வெளிவந்த செய்திகள் தற்போது இந்தியாவின் பெருநகரங்களிலும் கண்கூடான காட்சியாக மாறி வருகிறது.

இத்தகைய காட்சிகள் நாடு முன்னேறிவிட்டது என்று பெருமை கொள்வதா அல்லது பெருகும் வாகனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, போக்குவரத்து கட்டமைப்புகள், வாகன பயன்பாடு கொள்கைகள் வகுக்கப்படவில்லை என்று வருத்தப்படுவதா என்ற சந்தேகம் எழுகிறது. இந்த காட்சிகள் டெல்லி, ஐதராபாத், மும்பை, பெங்களூரு நகரங்களுக்கு மட்டுமின்றி, சென்னை போன்ற நகரங்களிலும் அவ்வப்போது தலைதூக்கி வாகன ஓட்டிகளையும், பொதுமக்களையும் அவதிக்குள்ளாக்குகிறது.

இந்தியாவிலேயே அதிகபட்சமாக ஒரு கி.மீட்டருக்கு 9,500 வாகனங்கள் ஐதராபாத் நகரில் இருப்பதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. அங்கு தற்போது 86 லட்சம் வாகனங்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. ஆண்டுக்கு 40 சதவீதம் என்ற அளவில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்தவண்ணம் உள்ளது. ஒரு கி.மீட்டர் சாலையில் எத்தனை வாகனங்கள் ஓடுவதற்கு அனுமதிக்கலாம் என்பது குறித்து அறிவியல் பூர்வமான கொள்கை எதுவும் வகுக்கப்படாததே இதுபோன்ற வாகன நெரிசலுக்கு காரணமாகும்.

உதாரணமாக, சென்னை வேளச்சேரி போன்ற பகுதிகளில் உள்ள மக்கள்தொகை எண்ணிக்கையும், வாகனங்களின் எண்ணிக்கையும் இருக்கும் கட்டமைப்பை விட பன்மடங்கு அதிகம். இருக்கும் சாலைகள் மற்றும் உள்கட்டமைப்புக்கு ஏற்ப வாகனங்களின் எண்ணிக்கையை அனுமதிப்பது குறித்து தேசிய அளவில் கொள்கைகள் வகுத்து அதை மிகவும் கண்டிப்புடன் அமல்படுத்துவதே எதிர்காலத்தில் இத்தகைய பிரச்சனைகளுக்கு நிரந்தரத் தீர்வாக அமையும்.

## ஜிஎஸ்டி விகித மாற்றம் அமலுக்கு வருகிறது: கார், பைக், செல்போன், டிவி விலை குறையும்

புதுடெல்லி, செப்.05-

மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் ஜிஎஸ்டி கவுன்சிலின் 56வது கூட்டம் டெல்லியில் நேற்று தொடங்கியது. இதையடுத்து, வரி குறைப்பு நடவடிக்கைகள் உடனடியாக அமலுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேநேரத்தில் வரி மறுசீரமைப்பால் மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுசெய்ய மத்திய அரசு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் ஆளும் 8 மாநிலங்கள் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளன.

மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் மாநில நிதியமைச்சர்கள் அடங்கிய ஜிஎஸ்டி கவுன்சிலின் 56வது கூட்டம் செப்.3 மற்றும் செப். 4 ஆகிய இரு நாட்கள் நடைபெறுகிறது. இதில், அடுத்த தலைமுறைக்கான ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் குறித்த விரிவான விவாதங்கள் தொடங்கின. அதன்படி, பெரும்பாலான பொருட்கள் மீதான வரி விகிதங்கள் குறைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், சிறு, குறு நடுத்தர (எம்எஸ்எம்இ) நிறுவனங்களுக்கான வரி சுமையும் கணிசமாக குறையும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தற்போதுள்ள சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) விகிதத்தை இரண்டாக குறைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, 12 மற்றும் 28 சதவீத வரி அடுக்குகள் நீக்கப்பட்டு 5 சதவீதம் மற்றும் 18 சதவீதம் என 2 ஆக குறைப்பது தொடர்பாக ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளது.

புகையிலை மற்றும் மிகவும் ஆடம்பர பொருட்கள் உள்ளிட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட சில பொருட்களுக்கு மட்டும் அதிகபட்சமாக 40 சதவீதம் வரி விதிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

மத்திய அரசு பரிந்துரை செய்து மாநில நிதியமைச்சர்களால் பரிசீலனை செய்யப்பட்ட வரி மறுசீரமைப்பு திட்டத்தின்படி, 12 சதவீத வரி விதிப்பு பிரிவில் உள்ள வெண்ணெய், பழச்சாறு, உலர் பழங்கள் போன்ற 99 சதவீத பொருட்கள் 5 சதவீத வரி வரம்புக்குள் மாற்றப்படும்.

இதேபோல், கார், பைக், ஏசி, டிவி, பிரிட்ஜ், சலவை இயந்திரங்கள் போன்ற மின்னணுப் பொருட்கள், சிமென்ட் போன்ற பிற பொருட்களுக்கு தற்போது 28 சதவீத வரி விதிக்கப்படுகிறது. இந்த வரி அடுக்கில் உள்ள 99 சதவீதப் பொருட்கள்



18 சதவீத குறைந்த வரி விகிதத்துக்கு கொண்டு வரப்படு கின்றன.

எதிர்க்கட்சி மாநிலங்கள் ஆலோசனை: ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்துக்கு முன்னதாக நேற்று காலை எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் ஒன்று கூடி ஆலோசனை நடத்தின. இமாச்சல பிரதேசம், ஜார்க்கண்ட், கர்நாடகா, கேரளா, பஞ்சாப், தமிழ்நாடு, தெலங்கானா மற்றும் மேற்கு வங்கம் ஆகிய 8 மாநிலங்களைச் சேர்ந்த நிதியமைச்சர்கள் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர். இதில், வரி விகித மறுசீரமைப்புக்கு ஒப்புதல் தெரிவிக்க வருவாய் பாதுகாப்புக்கான தங்களது கோரிக்கையை மத்திய அரசிடம் மீண்டும் வலியுறுத்துவதென முடிவானது. ஜிஎஸ்டி மறுசீரமைப்பு அமல்படுத்தப்பட்ட பிறகு அனைத்து மாநிலங்களுக்கும் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடு செய்ய எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் கோரியுள்ள நிலையில், பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகிக்கும் தெலுங்கு தேச கட்சியும் இதனை வலியுறுத்தியுள்ளது. அக்கட்சியின் மூத்த தலைவரும், ஆந்திர மாநிலத்தின் நிதியமைச்சருமான பையாவுலா கேசவ் செய்தியாளர்களிடம் கூறுகையில், "ஜிஎஸ்டி விகிதங்கள் மறுசீரமைக்கப்படுவதை ஒரு கூட்டணிக் கட்சியாக தெலுங்கு தேசம், மத்திய அரசுக்கு ஆதரவளிக்கிறது. இது, சாமானிய மக்களுக்கு சாதகமான நடவடிக்கை" என்றார். ஜார்க்கண்ட் நிதியமைச்சர் ராதா கிருஷ்ண கிஷோர் கூறுகையில், "மத்திய அரசு ஜிஎஸ்டி சீர்திருத்தத்தை செயல்படுத்தினால் எங்களது மாநிலம் ரூ.2,000 கோடி அளவுக்கு வருவாய் இழப்பை சந்திக்கும். இந்த இழப்பை ஈடு செய்ய மத்திய அரசு ஒப்புக்கொண்டால் வரி மறுசீரமைப்பை அங்கீகரிப்பதில் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. அத்துடன் மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடு செய்வது மத்திய அரசின் பொறுப்பாகும்" என்றார்.

பிரதமர் மோடி கடந்த ஆகஸ்ட் 15ம் தேதி ஆற்றிய சுதந்திர தின உரையில் தீபாவளி பரிசாக ஜிஎஸ்டி சீர்திருத்தங்களுக்கான திட்டத்தை வெளியிட்டார். அதன்பிறகு, மத்திய அரசு பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த அமைச்சர்கள் குழுவுடன் மறுசீரமைப்புக்கான திட்டங்களின் வரைவை பகிர்ந்து கொண்டது.

இந்த வரைவு திட்டத்தின்படி, ஜவுளி, உரம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, வாகனம், கைவினைப்பொருட்கள், விவசாயம், சுகாதாரம் மற்றும் காப்பீடு ஆகிய 8 துறைகள் வரி அடுக்கு மாற்றத்தால் மிகவும் பலனைடையும் என்று கூறப்படுகிறது.

தற்போதைய ஜிஎஸ்டி வரி கட்டமைப்பின் கீழ், மொத்த ஜிஎஸ்டி வசூலில் 18 சதவீத வரி அடுக்கு அதிகபட்சமாக 65 சதவீத பங்கை கொண்டுள்ளது. அதேபோன்று 5 சதவீத வரி அடுக்கு 7 சதவீத பங்களிப்பை வழங்குகிறது.

ஆடம்பர மற்றும் புகையிலை போன்ற பொருட்களுக்கு விதிக்கப்படும் 28 சதவீத வரி மொத்த ஜிஎஸ்டி வசூலில் 11 சதவீத பங்காக உள்ளது. அதேநேரத்தில், 12 சதவீத வரி அடுக்கு இந்த வருவாயில் 5 சதவீத பங்கை மட்டுமே கொண்டுள்ளது.

கட்டமைப்பு சீர்திருத்தங்கள், வரி விகித எளிமைப்படுத்தல், வாழ்க்கை தரத்தை உயர்த்தல் ஆகிய 3 அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு ஜிஎஸ்டி மறுசீரமைப்பை ஜிஎஸ்டி கவுன்சில் மேற்கொள்ள உள்ளது.

# தமிழ்நாடு முதலமைச்சர் "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட சிறப்பு மருத்துவ முகாமானது, வருகின்ற 6.9.2025 அன்று திருப்புவனம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, செப்.05-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 2.8.2025 அன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், "நலம் காக்கும் ஸ்டாலின்" எனும் புதிய திட்டத்தினை தொடங்கி வைத்துள்ளார்கள்.

இத்திட்டத்தின் வாயிலாக தமிழகம் முழுவதும் சுமார் 1,256 உயர்தர மருத்துவ மையங்கள் மூலம் 17 சிறப்பு மருத்துவ துறைகள் வாயிலாக கட்டணமில்லா மருத்துவ சேவைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில், வாரத்திற்கு ஒரு முகாம் வீதம் மொத்தம் 39 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், வருகின்ற 6.9.2025ஆம் தேதியன்று திருப்புவனம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமானது நடைபெறவுள்ளது.

இம்மருத்துவ முகாமில், ரூபாய் 3 ஆயிரம் மதிப்பீட்டிலான இரத்த பரிசோதனை, இ.சி.ஜி உள்ளிட்ட பல்வேறு மருத்துவ பரிசோதனைகள் அனைத்தும், பொதுமக்களுக்கு இலவசமாக மேற்கொள்ளப்படவுள்ளது.


மேலும், கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், பல் மருத்துவம், எலும்பு மருத்துவம், நரம்பியல் மருத்துவம், மனநல மருத்துவம், சர்க்கரை நோய் மருத்துவம், நுரையீரல் நோய் மருத்துவம், பொது மருத்துவம், இருதய மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், தோல் மருத்துவம், சித்த மருத்துவம், இயன்முறை மருத்துவம், அறுவை சிகிச்சை மருத்துவம், மகப்பேறு மருத்துவம் உள்ளிட்ட 17 வகையான சிறப்பு மருத்துவ நிபுணர்களை கொண்டு, சிறப்பான மருத்துவ சேவைகளும் இம்முகாமின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மருத்துவர்களால் பரிந்துரைக்கப் படுவர்களுக்கு எக்கோ பரிசோதனை (Echocardiogram), எக்ஸ்ரே (X-Ray), அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் (USG), பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய் பரிசோதனை களும் இம்முகாம்களிலேயே மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சிறப்பு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, தாய் சேய் நல ஊட்டச்சத்து பெட்டகங்களும் வழங்கப்படவுள்ளது. அதுமட்டுமன்றி, இம்முகாம்களின் வாயிலாக, முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டு அட்டை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ சான்றிதழ்களும் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக, முகாமிற்கு வருகைபுரியும் பொதுமக்கள் தங்களின் ஆதார் அட்டையின் நகலினை கொண்டு வருதல் அவசியமாகும். மேலும், இம்முகாமில் காப்பீடு அட்டை வேண்டி விண்ணப்பிப்பவர்கள், குடும்ப அட்டை (Smart Card), ஆதார் அட்டை மற்றும் கிராம நிர்வாக அலுவலரிடம் தங்களது ஆண்டு வருமானம் ரூபாய் 1.20 இலட்சத்துக்கு குறைவாக உள்ளதற்கான சான்று ஆகியவைகளை கொண்டு வருதல் வேண்டும்.

இதுபோன்று, உயிர் காக்கும் தரமான மருத்துவ சேவையினை பொதுமக்களுக்கு வழங்குவதற்கென மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டமானது, செயல்படுத்தப்பட்டுள்ளது.

இதனை பொதுமக்கள் கருத்தில் கொண்டு, தங்களது பகுதிகளில் நடைபெறவுள்ள "நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாமினை பயன்படுத்திக் கொண்டு, தங்களது உடல்நலத்தினை முறையாக பேணிக்காத்து பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.




# 40வது தேசிய கண்தான இருவார விழிப்புணர்வு நிகழ்ச்சி

இராமநாதபுரம், செப்.05-

இராமநாதபுரம் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம் மற்றும் மதுரை கண் மருத்துவமனை இணைந்து 40வது தேசிய கண்தான இருவார விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் எய்ம்ஸ் மருத்துவமனை நிர்வாக இயக்குநர் மரு.ஹனுமந்த ராவ் அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையேற்று விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்து, பேரணியில் பங்கேற்றார்.

இப்பேரணியில் 100க்கும் மேற்பட்ட மருத்துவ மாணவர்கள் மற்றும் பயிற்சி செவிலியர்கள் கலந்து கொண்டு கண்தானத்தின் முக்கியத்துவம் மற்றும் அதன் பயன்கள் குறித்த விழிப்புணர்வு பதாகைகள் ஏந்தி பொதுமக்கள் பார்த்து அறிந்து கொள்ளும் வகையில் பேரணி நகரின் முக்கிய இடங்களுக்கு சென்று நிறைவாக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வந்தடைந்தது.

அதனைத்தொடர்ந்து அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கூட்டரங்கில் கண்தானம் விழிப்புணர்வு குறித்த கருத்தரங்கம் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கண்தானம் குறித்து பேராசிரியர்கள் மூலம் கருத்துரைகள் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மூத்த கண் அறுவை சிகிச்சை நிபுணர் மரு.சந்திரசேகரன் அவர்களுக்கு நினைவு பரிசு வழங்கி பாராட்டப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் (பொ) மரு.கணேஷ்பாபு அவர்கள், கண் மருத்துவத்துறை தலைமை மருத்;துவர் மரு. ராஜா அவர்கள், கண் மருத்துவர்கள் அவர்கள் மரு.காயத்ரி, மரு.சக்;திவேல் அவர்;கள், மரு.சியாமளா அவர்கள், மரு.சுபசங்கரி அவர்கள், மரு.பிரீத்திகா அவர்கள், மரு.தேஜஸ்வி அவர்கள் மற்றும் மருத்துவர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் வட்டத்திற்குட்பட்ட மலங்கரை கத்தோலிக்க பொறியியல் கல்லூரி (மரியகிரி) வளாகத்தில்

# 06.09.2025 அன்று நலம் காக்கும் ஸ்டாலின் முழு உடல் மருத்துவ பரிசோதனை முகாம் நடைபெறவுள்ளது

கன்னியாகுமரி, செப்.05-

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் வட்டம், முஞ்சிறை வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்குட்பட்ட மலங்கரை கத்தோலிக்க பொறியியல் கல்லூரி (மரியகிரி) வளாகத்தில் 06.09.2025 அன்று நடைபெறவுள்ள நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு முகாம் முன்னேற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

தமிழ்நாட்டை நோயில்லாத மாநிலமாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு முகாமினை தமிழ்நாடு முழுவதும் 02.08.2025 அன்று சென்னையிலிருந்து காணொலி காட்சி வாயிலாக துவக்கி வைத்தார்கள்.

அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் முதல் முகாம் 02.08.2025 அன்று நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட நாகர்கோவில் கார்மல் மேல்நிலைப்பள்ளியிலும், இரண்டாவது முகாம் 09.08.2025 அன்று திருவட்டார் வட்டத்துக்குட்பட்ட சித்திரங்கோடு டிரினிட்டி சென்ட்ரல் பள்ளி வளாகத்திலும் நடைபெற்றது. மூன்றாவது முகாம் 23.08.2025 அன்று தக்கலை வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்குட்பட்ட முளகுமூடு செயின்ட் ஜோசப் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியிலும், அகஸ்தீஸ்வரம் வட்டத்திற்குட்பட்ட நான்காம் கட்ட முகாம் மைலாடி எஸ்.எம். மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

தொடர்ந்து ஐந்தாவது முகாம் கிள்ளியூர் வட்டம், முஞ்சிறை வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்குட்பட்ட மெதுகும்மல், குளப்புரம், அடைக்காகுழி, சூழால், நடைக்காவு, மங்காடு, வாவறை ஆகிய ஊராட்சிக்குட்பட்ட பொதுமக்கள் அனைவரும் தங்கள் பகுதிக்கு அருகாமையில் உள்ள மலங்கரை கத்தோலிக்க பொறியியல் கல்லூரி (மரியகிரி) வளாகத்தில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும் நலம் காக்கும் ஸ்டாலின் - முழு உடல் பரிசோதனை முகாமில் கலந்துகொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

# மழைநீரை சேமிக்க ரூ.160 கோடி செலவில் சென்னையில் 70 குளங்கள் புனரமைப்பு, 88 மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைப்பு

சென்னை, செப்.05-

சென்னையில் மழைநீரை சேமிக்கும் வகையில் ரூ.159.08 கோடியில் 70 குளங்கள் புனரமைக்கப்பட்டு, 88 மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக்குறிப்பு: சென்னை மாநகராட்சியில் பருவமழையை முன்னிட்டு ஆறுகள், குளங்கள், கால்வாய்களை தூர்வாரி அதன் கட்டமைப்புகளை மேம்படுத்துதல், மழைநீர் வடிகால்வாய்களை அமைத்தல், மழைநீர் வடிகால்வாய்களில் தூர்வாரும் பணி உள்ளிட்டவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதே போல் குடியிருப்புப் பகுதிகளில் மழைநீர் தேங்குவதைத் தடுத்து அதைச் சேமிக்கும் வகையில் ஜெர்மன் தொழில்நுட்பத்தில் விளையாட்டு மைதானங்கள், பூங்காங்கள், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் 70 குளங்கள் ரூ.144.34 கோடியில் புனரமைக்கப்பட்டுள்ளன. பூங்காக்களில் தேங்கும் மழைநீரை முழுமையாக சேமிக்கும் வகையில் சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.14.74 கோடியில் 88 மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்திய சுற்றுச்சூழல் அறக்கட்டளை சார்பில் தென்சென்னை பகுதியில் 22 குளங்களில் மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வரும் நிலையில், மேலும் புதிதாக 41 குளங்களில் ரூ.119.42 கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிண்டி ரேஸ் கிளப் வளாகத்தில்கடந்த ஆண்டில் 4 புதிய குளங்கள் அமைக்கப்பட்டு, அதன் கொள்ளளவை இரட்டிப்பாக்க பணிகள் நடந்து வருகின்றன.

இதற்கிடையே எம்.ஆர்.டி.எஸ். பகுதியில் சிக்ஸ் வென்ட் கல்வெர்ட் அருகில் கடந்த ஆண்டில் 2 குளங்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக பருவமழைக் காலங்களில் அதிக அளவில் மழைநீரை சேமித்து சாலை மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் மழைநீர் தேக்கத்தை தவிர்க்க முடியும். மழைநீரை நிலத்தடியில் சேமிக்கவும் சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 05.09.2025 அன்று "நபிகள் நாயகம்" பிறந்த தினத்தை முன்னிட்டு மதுபானக் கடைகள் அடைப்பு

மதுரை, செப்.05-

மதுரை மாவட்டத்தில் 05.09.2025 அன்று " நபிகள் நாயகம்" பிறந்த தினத்தை முன்னிட்டு, உரிமம் பெற்றுள்ள அனைத்து தமிழ்நாடு மாநில வாணிபக் கழக மதுபான சில்லரை விற்பனைக் கடைகள், அதனுடன் இணைந்து இயங்கும் மதுக்கூடங்கள் (FL1/FL2/FL3/FL3A/FL3AA /FL4 ñÁ‹ FL11) மனமகிழ் மன்றங்கள், தங்கும் விடுதியுடன் கூடிய மது அருந்தகங்கள், அயல்நாட்டு மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் ஆகியவை மூடப்பட்டு இருக்கும். மேற்படி 05.09.2025 அன்றைய தினத்தில் மது விற்பனை தொடர்பான விதிமீறல்கள் ஏதும் நடைபெறாமல் கண்காணிக்கவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி தினத்தில் மதுபான சில்லரை விற்பனை எதுவும் நடைபெறாது எனத் தெரிவிக்கப்படுகிறது.



# கச்சத் தீவுக்கு சுற்றுலா: இலங்கை அரசு முடிவு

ராமேசுவரம், செப்.05-

இலங்கையில் உள்ள யாழ்ப்பாணம் மண்டல தீவில் பல்வேறு திட்ட பணிகளைத் தொடங்கி வைத்த அந்நாட்டு அதிபர் அநுர குமார திசாநாயக்க, அன்று மாலை கச்சத்தீவுக்கு பயணம் மேற்கொண்டார்.

இந்தப் பயணத்தின்போது உடன் சென்ற அந்நாட்டு மீன்வளத் துறை அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர், அதிபரின் கச்சத்தீவு பயணம் குறித்து யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் கூறும்போது, "இலங்கையில் சுற்றுலாத் துறையை மேம்படுத்த பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

அதன்படி, யாழ்ப்பாணத்திலிருந்து நெடுந்தீவுக்கு தற்போது சுற்றுலா பயணிகள் வரும் நிலையில் அதனை கச்சத்தீவு வரை நீட்டிப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி விரைவில் ஆய்வு மேற்கொள்ளப்படும்" என்றார்.



இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில்

# பள்ளிக்கல்வி உயர்கல்வி வழிகாட்டி திட்டத்தின்கீழ் கல்லூரி களப்பயணம் துவக்க விழா நிகழ்ச்சி

இராமநாதபுரம், செப்.05-

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இன்று (04.09.2025) ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி உயர்கல்வி வழிகாட்டி திட்டத்தின்கீழ் கல்லூரி களப்பயணம் துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன் இ.ஆ.ப.,அவர்கள் மாணவ, மாணவியர்களின் கல்லூரி களப்பயணத்தின் வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

ஒவ்வொரு ஆண்டும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி உயர்கல்வி வழிகாட்டி திட்டத்தின் மூலம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவ,மாணவிகளுக்கு அந்தந்த மாவட்டத்தில் உள்ள கல்லூரிகளுக்கு களப்பயணமாக அழைத்துச் சென்று மாணவ, மாணவிகளுக்கு பாடத்திட்டத்தின் பயன்கள் குறித்து எடுத்துரைக்கப்படுவதுடன் அவர்களின் உயர்கல்விக்கு வழிகாட்டியாகவும், ஊக்கப்படுத்தும் வகையில் இப்பயணம் பயனுள்ளதாக அமைந்து வருகின்றது.

அந்த வகையில் நடப்பு கல்வியாண்டில் 70 அரசு மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 2079 மாணவ, மாணவியர்களை 13 கல்லூரிகளுக்கு அதாவது மருத்துவம், பொறியியல்,சட்டக்கல்லூரி, கலை மற்றும் அறிவியல் கல்லூரி உள்ளிட்ட கல்லூரிகளுக்கு அழைத்துச் சென்று பாடத்திட்டங்கள் குறித்து தெரிவிக்கப்படுகின்றன. இதன்மூலம் மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவியர்களின் உயர்கல்வியில் படிப்பதற்கு ஆர்வமுடன் செயல் படுவார்கள். இப்பயணம் மாணவ, மாணவியர்களுக்கு பயனுள்ளதாக அமைந்திடும் என செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் (பொ) திரு.பிரின்ஸ் ஆரோக்கியராஜ் அவர்கள், மேல்நிலைக்கல்வி உதவி திட்ட அலுவலர்கள் திரு.கண்ணன் அவர்கள், திரு.கணேசபாண்டியன் அவர்கள், தலைமையாசிரியை திருமதி. ஜோவிக்டோரியா அவர்கள், மாவட்ட உயர்கல்வி வழிகாட்டி ஒருங்கிணைப்பாளர்கள் திரு.மகேந்திரன் அவர்கள், திரு.சுரேஷ் அவர்கள், திரு.விஜயராம் அவர்கள்,திரு.ரவிவர்மா அவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் மாற்றுத்திறனாளிகள் எண்ணிக்கை தொடர்பாக,

# கணக்கெடுப்பு பணிக்கென கையடக்க கணினிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி முன்களப்பணியாளர்களுக்கு வழங்கினார்

சிவகங்கை, செப்.05-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் கீழ், சுவஸ்திக் தொண்டு நிறுவனம் மூலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் மாற்றுத்திறனாளிகள் எண்ணிக்கை தொடர்பாக, முன்களப்பணி யாளர்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் கணக்கெடுப்பு பணிக்கென கையடக்க கணினிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற் கொடி முன்களப்பணி யாளர்களுக்கு வழங்கி தெரிவிக்கையில்,



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக் களின் நலனை கருத்தில் கொண்டு, எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார் கள். அதில், குறிப்பாக மாற்றுத்திறனாளிகளின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு, மாற்றுத்திறன் கொண்டவர்களின் மறுவாழ்விற்கென எண்ணற்ற திட்டங்களை வழங்கி, அவர்களின் நலன் காத்து வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் மாற்றுத்திறனாளிகளின் மேம்பாட்டுக்காக அரசின் சார்பில் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த நலத்திட்டங்கள் மாற்றுத்திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று சேரும் வகையில், உலக வங்கி நிதிவுதவியுடன் தமிழ்நாடு உரிமைகள் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில் இல்லம் தோறும் சென்று அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளையும் கண்டறிந்து, அவர்களது முழு விவரங்கள் அடங்கிய சமூக தரவுத்தளத்தை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அக்கணக்கெடுப்பு பணியானது கடந்த ஜூலை 10 முதல் தொடங்கப்பட்டு, சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இப்பணியானது, மாவட்டத்தின் அனைத்து கிராம ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சி பகுதிகளில், சுவஸ்திக் தொண்டு நிறுவன முன்களப்பணியாளர்கள் மூலம் வீடு வீடாகச் சென்று கணக்கெடுப்பு நடத்தி மாற்றுத்திறனாளிகள் குறித்த விவரங்களை சேகரிக்கும் பணிகள் முன்களப்பணியாளர்கள் வாயிலாக சிறப்பாக நடைபெற்று வருகிறது. அக்கணக்கெடுப்பு பணியினை முழுமையாக முடிப்பதற்கு ஏதுவாக, கையடக்க கணினிகள் வழங்குவது பொருட்டு, இன்றையதினம் 160 முன்களப் பணியாளர்களுக்கு கையடக்க கணினிகள் வழங்கப்பட்டுள்ளது.

இப்பணியில் ஈடுபட்டுள்ள முன்களப்பணியாளர்கள் தங்களது பணிகளை திறன்பட மேற்கொள்ளுதல் வேண்டும். மேலும், இக்கணக்கெடுப்பு பணியினை மேற்கொண்டு வரும் முன்களப்பணியாளர்கள் தங்களது வீடுகளுக்கு வரும்போது, அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்கி, உரிய விபரங்களை வழங்குதல் வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.பாலகிருஷ்ணன், மாவட்ட திட்ட அலுவலர் (தமிழ்நாடு உரிமைகள் திட்டம்) திரு.அழகுமீனன், சுஸ்வதிக் தொண்டு நிறுவன செயலாளர் திரு.தமிழ்துரை, திறன் மேம்பாட்டு நிபுணர் திரு.ராஜா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## 30% மானியத்துடன் உழவர் நல சேவை மையங்கள் அமைக்க வேளாண் சார்ந்த பட்டய மற்றும் பட்டப் படிப்பை முடித்த இளைஞர்கள் விண்ணப்பிக்கலாம்

### மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

தேனி, செப்.05- உழவர்களின் நலன் காக்கும் பல்வேறு திட்டங்கள் தமிழக அரசால் அமல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக, வேளாண் சார்ந்த பட்டய மற்றும் பட்டப் படிப்பைமுடித்த இளைஞர்களின் திறன் உழவர்களுக்கு உதவியாக இருந்து உற்பத்தியை உயர்த்தும் வகையில் முதல்வரின் உழவர் நல சேவை மையங்கள் அமைக்கப்பட உள்ளது.

இத்திட்டத்தில் 15 வேளாண் பட்டதாரிகளுக்கு ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் உழவர் நலசேவை மையம் அமைக்க 30 சதவீத மானிய மாக மூன்று லட்சமும், ரூபாய் 20 இலட்சம் மதிப்பிலான உழவர் நலசேவை மையம் அமைக்க 30 சதவீத மானியமாக ரூபாய் 6 இலட்சமும் என மொத்தம் ரூ.66 இலட்சம் மானியமாக வழங்கிட தேனி மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மையங்களில் உழவுகளுக்கு தேவையான விதை, உரங்கள் உள்ளிட்ட இடுபொருட்கள் விற்பனை செய்யப்படுவதோடு, பயிர்களில் ஏற்படும் பூச்சி நோய் மேலாண்மைக்கு தேவையா ன ஆலோசனைகளும் வழங்கப்படும். மேலும், நவீன தொழில்நுட்பங்கள், வேளாண் விளைபொருட்களை மதிப்பு கூட்டுதல், வேளாண் இயந்திரம் வாடகை மையம், ட்ரோன் சேவை, வேளாண் இயந்திரம் பழுதுபார்க்கும் பட்டறை போன்ற அனைத்து வேளாண்மை சார்ந்த சேவைகளும் வழங்கப்படும். இந்த மையங்கள் மூலம் விவசாயிகள் ஒரே இடத்தில் அனைத்து சேவைகளையும் பெறமுடியும்.

வேளாண் பட்டதாரிகள் சுயதொழில் செய்வதற்கும் இத்திட்டம் வாய்ப்பு ஏற்படுத்துகிறது. இதில் இணையும் பயனாளிகளின் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்தும் வகையில் வேளாண் அறிவியல் நிலையத்தில் பயிற்சி அளிக்கப்படும்.

இத்திட்டத்தில் பயன்பெறவிரும்பும் 20 முதல் 45 வயதுக்குட்பட்ட வேளாண் பட்டதாரிகள் வங்கியில் விரிவான திட்ட அறிக்கையுடன் கடன் பெறலாம். வங்கி நடைமுறைகளை பின்பற்றி கடன் ஒப்புதல் பெற்ற பின்பு மானிய உதவிபெற https://www.tnagrisnet.tn.gov.in/KaviaDP/register என்ற இணையதள முகவரியில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து விண்ணப்பிக்கலாம். அல்லது அந்தந்த பகுதி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி பதிவு செய்து கொள்ளலாம். மேலும், கூடுதல் விவரங்களுக்கு, வேளாண்மை அலுவலர் (தரக்கட்டுபாடு) அவர்களை 94432 32238 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

முதல்வரின் உழவர் நல சேவை மையங்கள் அரசின் உதவியுடன் தொடங்கப்படும் சுய தொழில் என்பதால், இந்த அரிய வாய்ப்பை வேளாண் பட்டதாரிகள் மற்றும் பட்டயபடிப்பு முடித்தோர் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத்சிங், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

## மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி அறிவுரையின்படி, திருப்பத்தூர் பகுதியில் நடைபெற்ற உயர்வுக்கு படி முகாமில் பங்கேற்ற மாணாக்கர்களுக்கு சேர்க்கைக்கான படிவத்தினை தேவகோட்டை சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ் வழங்கினார்



சிவகங்கை, செப்.05- சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம் ஆர்.சி பாத்திமா நடுநிலைப்பள்ளி வளாகத்தில் அன்று, மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் பள்ளிக்கல்வித்துறை ஆகியவைகளின் சார்பில், நான் முதல்வன் திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் அறிவுரையின்படி நடைபெற்ற உயர்வுக்கு படி முகாமில் பங்கேற்ற மாணாக்கர்களுக்கு சேர்க்கைக்கான படிவத்தினை தேவகோட்டை சார் ஆட்சியர் திரு. ஆயுஷ் வெங்கட் வட்ஸ் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, மாணாக்கர்கள் உயர்கல்வி கற்பதற்கு அடிப்படையாக, திகழ்கின்ற வகையில் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் உயர்வுக்குப்படி முகாமானது தமிழகம் முழுவதும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

பள்ளிப்படிப்பை முடித்த அனைத்து மாணவர்களும் இடைநிற்றல் இன்றி 100 சதவீதம் உயர்கல்வி பெறுவதை உறுதி செய்திடும் பொருட்டு, இம்முகாமானது மாவட்ட நிர்வாகம், பள்ளிக்கல்வித்துறை மற்றும் தமிழ்நாடு திறன்மேம்பாட்டுக்கழகம் ஆகியவைகளின் சார்பில் நடைபெற்று வருகிறது.

மாணாக்கர்கள் தங்களது ஆர்வத்தின் அடிப்படையில் தங்களுக்கான பாடப்பிரிவுகளை தேர்தெடுத்தல், சிறந்த கல்லூரிகளில் சேர்ந்து பயிலுதல், தொழில் படிப்புகள், கல்விக்கடன் பெறுதல் உள்ளிட்டவைகள் குறித்து, ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல்கள், மாணவர்களுக்கு தேவையான சான்றிதழ்கள், போன்றவை குறித்து இம்முகாமில் பங்குபெற்றுள்ள துறைசார்ந்த வல்லுநர்கள் எடுத்துரைப்பார்கள்.

உயர்கல்வி பயில உள்ள மாணவர்களுக்கு அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள், தனியார் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்கள் மூலம் உடனடி சேர்க்கையில் சேர வழிவகை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதற்கென சிவகங்கை மாவட்டத்திலுள்ள அரசு / அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், ஐடிஐ மற்றும் பாலிடெக்னிக் நிறுவனங்களின் சார்பில் அரங்குகளும் இம்முகாமில் அமைக்கப்படுகிறது.

அதனடிப்படையில், சிவகங்கை மாவட்டத்தின் அனைத்து பகுதி மாணாக்கர்களும் பயன்பெறும் வகையில், இரண்டு கட்டங்களாக நான்கு இடங்களில் உயர்வுக்கு படி முகாமானது நடத்திட திட்டமிடப்பட்டு, முதற்கட்டமாக கடந்த 22.08.2025 அன்று சிவகங்கை மருதுபாண்டியர் நகர் அரசு மேல்நிலைப்பள்ளி வளாக கூட்டரங்கில் சிறப்பாக நடைபெற்றது. அதனைதொடர்ந்து, இரண்டாம் கட்டமாக நேற்றைய தினம் (02.09.2025) திருப்பத்தூர் வட்டத்திற்குட்பட்ட ஆர்.சி பாத்திமா நடுநிலைப்பள்ளி வளாகத்தில் உயர்வுக்குபடி முகாமானது, சிறப்பாக நடைபெற்றது.


அம்முகாமில், உயர்வுக்குப் படி முகாமில், 62 மாணவர்கள் கலந்து கொண்டுள்ளனர். அதில், 8 மாணவர்களுக்கு உடனடி சேர்க்கைக்கான அனுமதி ஆணையும் உடனடியாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், இதுதவிர 10 மாணவர்கள் உயர்கல்வி சேர்வதற்கு தங்களது விருப்பங்களை தெரிவித்துள்ளனர்.

இதனை, மாணாக்கர்கள் கருத்தில் கொண்டு, தங்களது வாழ்வில் சிறந்து விளங்குவதற்கு அடிப்படையான உள்ள உயர்கல்வியின் முக்கியத்துவத்தினை அறிந்து கொண்டு, தரமான கல்வியினை பெற்று, தங்களது பெற்றோர்களுக்கு உறுதுணையாக இருந்து, தங்களது வாழ்வில் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் கா.பொற்கொடி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) திரு.மாரிமுத்து, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.பிரவீன் குமார், வட்டாட்சியர் (திருப்பத்தூர்) திரு. மாணிக்கவாசகம், மாவட்ட ஆட்சியரின் தனி எழுத்தர் திரு.ஜெயப்பிரகாசம் மற்றும் மாணவ, மாணவியர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## இப்படியே சென்றால் காடுகளே இருக்காது' மரம் வெட்டுதலை கண்டித்து உச்ச நீதிமன்றம் கருத்து





புதுடெல்லி, செப்.05- சட்டவிரோதமாக மரம் வெட்டுதல் தொடர்ந்தால் காடுகளே இருக்காது என்று உச்ச நீதிமன்றம் கவலை தெரிவித்துள்ளது. மலைப் பிரதேசங்களில் சுற்றுச்சூழல் சீரழிவு ஏற்படுவது தொடர்பாக தொடரப்பட்ட பொது நல வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

சமீபத்தில், உத்தராகண்ட், இமாச்சலப் பிரதேசம், பஞ்சாப் உள்ளிட்ட வட மாநிலங்களில் கனமழையும், வெள்ளமும், நிலச்சரிவும் ஏற்பட்டு மக்களின் உயிருக்கும், உடைமைகளுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. இந்நிலையில், இமாச்சல் பிரதேச வெள்ள பாதிப்பு தொடர்பாக வெளியான ஊடகச் செய்திகளில் வெட்டப்பட்ட மரங்கள் வெள்ளத்தில் மிதந்து வரும் காட்சிகள் வெளியாகின. கூடவே அவை சட்டவிரோதமாக வெட்டப்பட்டு பதுக்கப்பட்ட மரங்கள் என்ற தகவலும் வெளியானது.

இந்நிலையில், மலைப்பிரதேசங்களில் நிலவும் சுற்றுச்சூழல் சீர்கேடு தொடர்பான பொது நல வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர். கவாய், நீதிபதி வினோத் சந்திரன் அடங்கிய அமர்வு சட்டவிரோதமாக மரம் வெட்டுதல் தொடர்ந்தால் காடுகளே இருக்காது என்று கவலை தெரிவித்துள்ளது. மேலும், சட்டவிரோத மரங்கள் வெட்டப்படுவது தொடர்பாக மத்திய அரசும், சம்பந்தப்பட்ட இமாச்சலப் பிரதேசம், உத்தராகண்ட், பஞ்சாப் மாநில அரசுகளும் 2 வாரங்களுக்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

வழக்கு விசாரணையின்போது தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் கூறுகையில், "பஞ்சாப், உத்தராகண்ட், இமாச்சல் பிரதேசத்தில் ஏற்பட்ட மழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவு பாதிப்பு எதிர்பாராதது. இமாச்சலப் பிரதேச பாதிப்பு தொடர்பான ஊடகச் செய்திகளில் வெள்ளத்தில் வெட்டப்பட்ட மரங்கள் அதிகளவில் மிதப்பதை காணமுடிந்தது. இதிலிருந்து இப்பகுதிகளில் சட்டவிரோதமாக மரங்கள் வெட்டப்படுவது தெள்ளத்தெளிவாகப் புலப்படுகிறது. இப்படியே சென்றால் இனி காடுகளே இருக்காது." என்றார்.

தொடர்ந்து நீதிபதிகள், "மத்திய அரசின் கூடுதல் சொலிசிடர் ஜெனரல் துஷார் மேத்தா சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்பு கொண்டு, வெள்ளத்தில் இவ்வளவு அதிகளவில் வெட்டப்பட்ட மரக்கட்டைகள், மரங்கள் மிதந்ததற்கான காரணத்தை அறிய வேண்டும்" என்று உத்தரவிட்டார். அதற்கு துஷார் மேத்தா, "இது தொடர்பாக சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் துறை செயலரை தொடர்பு கொண்டு விரிவான தகவல் பெறப்படும்." என்று உறுதியளித்தார். இந்த வழக்கு இன்னும் இரண்டு வாரங்களுக்குப் பின்னர் மீண்டும் விசாரணைக்கு வருகிறது.

## அதிமுக பொதுச் செயலாளர் தேர்வை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கு: உயர் நீதிமன்றம் நிராகரித்து உத்தரவு

சென்னை, செப்.05- கடந்த 2022ம் ஆண்டு ஜூலை 11ம் தேதி நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில், அதிமுக பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி அறிவிக்கப்பட்டதை எதிர்த்தும், பொதுக்குழு தீர்மானங்களை எதிர்த்தும் திண்டுக்கல்லை சேர்ந்த சூர்யமூர்த்தி என்பவர் சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை நிராகரிக்க கோரி எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து, கடந்த ஜூலை மாதம் சென்னை உரிமையியல் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. உரிமையியல் நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து எடப்பாடி பழனிசாமி சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கை நீதிபதி பி.பி.பாலாஜி விசாரித்தார். விசாரணையின் போது, எடப்பாடி பழனிசாமி தரப்பில், 2018ம் ஆண்டிலிருந்து சூர்ய மூர்த்தி கட்சியின் உறுப்பினராக இல்லை. கட்சியில் உறுப்பினராக இல்லாத ஒருவர் கட்சி விவகாரம் குறித்து கேள்வி எழுப்ப முடியாது. கடந்த 2021 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் எடப்பாடி தொகுதியில் அதிமுக பொதுச்செயலாளரை எதிர்த்து சூர்ய மூர்த்தி போட்டியிட்டதாக வாதிடப்பட்டது.

சூர்ய மூர்த்தி தரப்பில், கட்சி விதிப்படி சூரியமூர்த்தி, கட்சியின் உறுப்பினராக தொடர்கிறார். பொதுச்செயலாளர் அடிப்படை உறுப்பினர்களால் தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற கட்சியின் நிறுவனர் எம்.ஜி.ஆரின் விருப்பத்தை மீறி கட்சி விதியில் மாற்றம் செய்யப்பட்டது. பொதுச் செயலாளர் அடிப்படை உறுப்பினர்களால் தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற கட்சி விதியை மாற்ற முடியாது என வாதிடப்பட்டது. இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்திருந்தார்.

இன்று, இந்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதி பாலாஜி, எடப்பாடி பழனிசாமி தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதங்களை ஏற்று, சூரியமூர்த்தியின் வழக்கை நிராகரிக்க மறுத்த உரிமையியல் நீதிமன்ற உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டார். அதேபோல, சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் சூரியமூர்த்தி தாக்கல் செய்திருந்த வழக்கையும் நிராகரித்து உத்தரவிட்டுள்ளார்.

## திண்டிவனம் நகராட்சியில் பட்டியலின பணியாளரை திமுகவினர் காலில் விழவைத்த நிகழ்வு: அன்புமணி கண்டனம்

சென்னை, செப்.05- திண்டிவனம் நகராட்சியில் பட்டியலின பணியாளரை திமுவினரின் கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்க செய்த நிகழ்வில் சம்பந்தப்பட்ட அனைவரையும் உடனடியாக கைது செய்து சட்டப்படி தண்டனை பெற்றுத் தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "திண்டிவனம் நகராட்சியில் திமுக நகர்மன்ற உறுப்பினரின் சட்டவிரோத ஆணைகளுக்கு பணிய மறுத்ததற்காக அவரது காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கும்படி, பட்டியலினத்தைச் சேர்ந்த நகராட்சி இளநிலை உதவியாளர் முனியப்பனை கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறார். சமூகநீதியைக் காப்பதற்காகவே அவதாரம் எடுத்ததாகக் கூறிக் கொள்ளும் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் பட்டியலின அரசு அதிகாரி ஒருவரை திமுகவினரே காலில் விழச் செய்திருப்பது கண்டிக்கத்தக்கது.

திண்டிவனம் நகராட்சியில் நடைபெற்ற ஒப்பந்தப் பணிகள் தொடர்பான கோப்புகளை தம்மிடம் கொண்டு வந்து காட்டும்படி திமுகவைச் சேர்ந்த பெண் நகராட்சி உறுப்பினர் கட்டாயப்படுத்தியதாகவும், அதை செய்ய மறுத்ததற்காக அந்த உறுப்பினரின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கும்படி நகராட்சித் தலைவர், அவரது கணவர் உள்ளிட்டோர் கட்டாயப்படுத்தியதாகக் கூறப்படுகிறது. அதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட பெண் உறுப்பினரின் கால்களில் விழுந்து முனியப்பன் மன்னிப்புக் கேட்கும் காட்சிகள் சமூக ஊடகங்களில் வேகமாக பரவி வருகின்றன.

நகராட்சி இளநிலை உதவியாளருக்கு எந்த வகையான ஆணையை பிறப்பிக்கவும் நகர்மன்ற உறுப்பினருக்கு அதிகாரம் இல்லை. ஒருவேளை அவர் ஏதேனும் தவறு செய்திருந்தால் அது குறித்து நகராட்சி ஆணையர் உள்ளிட்ட உயரதிகாரிகளிடம் புகார் அளித்து சட்டப்பூர்வமாகத் தான் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அதை விடுத்து சம்பந்தப்பட்ட பட்டியலின பணியாளரை காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கும்படி திமுகவினர் கட்டாயப்படுத்தியிருப்பது அவர்களுக்கு அக்கட்சித் தலைமை எத்தகைய சமூகநீதிப் பாடத்தைக் கற்றுத் தந்திருக்கிறது என்பதையே காட்டுகிறது.

திண்டிவனம் நிகழ்வில் மட்டுமின்றி, தமிழ்நாடு முழுவதும் ஏராளமான நிகழ்வுகளில் பட்டியலின மக்களை அவமதிக்கும் வகையில் தான் திமுக நடந்து கொண்டுள்ளது. இதே விழுப்புரம் மாவட்டத்தில் செஞ்சி வட்டம் ஆனாங்கூர் ஊராட்சி மன்றத் தலைவரான பழங்குடியினத்தை சேர்ந்த சங்கீதாவுக்கு இருக்கைக் கூட வழங்கப்படாமல் அவர் மீது சாதிய வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. ஒரு கட்டத்தில் இந்த நிகழ்வை பாமக கண்டித்து, போராட்டம் நடத்தப் போவதாக எச்சரித்த பிறகு தான் அவருக்கு இருக்கை வழங்கப்பட்டது.

வேங்கைவயல் கிராமத்தில் பட்டியலினத் தவருக்கான குடிநீர்த் தொட்டியில் மலம் கலக்கப்பட்டது, நாற்றுக்கணக்கான உள்ளாட்சிகளில் பட்டியலின ஊராட்சித் தலைவர்களுக்கு தேசியக் கொடி ஏற்ற அனுமதி மறுக்கப்பட்டது, நாங்குநேரி சின்னத்துரை உள்ளிட்ட பட்டியலினத்தைச் சேர்ந்த மாணவர்கள் தாக்கப்பட்டது என பட்டியலினத்துக்கு எதிரான வன்முறைகள் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றன. இந்தக் கொடுமைகள் அனைத்தையும் திமுக அரசு வேடிக்கை மட்டும் தான் பார்த்துக் கொண்டிருக்கிறது.

பட்டியலின பணியாளரை திமுவினரின் கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்க செய்தது தான் திமுக கடைபிடிக்கும் சமூகநீதியா? என்பதை முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்க வேண்டும். பட்டியலின அதிகாரியை அவமதித்த திமுகவினர் உள்ளிட்டோர் மீது முதல் தகவல் அறிக்கை மட்டும் தான் பதிவு செய்யப்பட்டிருக்கிறதே தவிர, அவர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை. அவர்கள் மீது திமுக தலைமையும் நடவடிக்கை எடுக்கவில்லை. இதன் மூலம் அவர்களின் செயலை திமுக தலைமை ஆதரிக்கிறதா? என்பது தெரியவில்லை.

திண்டிவனம் நகராட்சி நிகழ்வில் சம்பந்தப்பட்ட அனைவரையும் உடனடியாக கைது செய்து சட்டப்படி தண்டனை பெற்றுத் தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்." என வலியுறுத்தியுள்ளார்.

## செட்டிநாடு விமான நிலையம் சாத்தியமில்லை என கைவிட்ட தமிழக அரசு காரைக்குடி மக்கள் அதிருப்தி

காரைக்குடி, செப்.05- மத்திய அரசு அறிவித்த செட்டிநாடு விமான நிலையத்துக்கு சாத்தியமில்லை என தமிழக அரசு கைவிட்டதால் காரைக்குடி மக்கள் அதிருப்தி அடைந்தனர். சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே செட்டிநாடு அரசு கால்நடை பண்ணை 1,907 ஏக்கரில் உள்ளது. இங்கு 2ம் உலகப் போரின்போது 1944ம் ஆண்டு அமைக்கப்பட்ட 2 நீளமான விமான ஓடுதளங்கள் உள்ளன. அவை தற்போது வரை ஓரளவு பெரிய அளவில் சேதமடையாமல் உள்ளன.

காரைக்குடி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த தொழிலதிபர்கள் அதிகளவில் விமானம் மூலம் நாட்டின் பல்வேறு முக்கிய பகுதிகளுக்கு சென்று வருகின்றனர். இதுதவிர கல்வி, பணி நிமித்தமாக வெளிநாடு செல்வோரும் அதிகளவில் உள்ளனர். மேலும் காரைக்குடி, செட்டிநாடு, பிள்ளையார்பட்டி உள்ளிட்ட பகுதிகளுக்கு அதிகளவில் வெளிமாநிலம், வெளிநாட்டில் இருந்து வருகின்றனர்.

மேலும் இப்பகுதிகளில் அடிக்கடி நடக்கும் திரைப்பட, சின்னத்திரை படப் பிடிப்புகளுக்காக திரைத் துறையினரும் அதிகளவில் வரு கின்றனர். அவர்கள் அனைவரும் தற்போது மதுரை, திருச்சி விமான நிலையங்களையே பயன்படுத்தி வருகின்றனர். இதனால் காரைக்குடி பகுதியில் விமான சேவை முக்கிய தேவையாக உள்ளது.

ஏற்கெனவே 'உடான்' திட்டத்தில் செட்டிநாட்டில் உள்நாட்டு விமான நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து கடந்த 2018ம் ஆண்டு நவம்பரில் இந்திய விமான சேவை கழக அதிகாரிகள் ஆய்வு செய்தனர். பின்னர் விமானிகள் பயிற்சி மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பின்னர், எந்த ஒரு மேல்நடவடிக்கையும் இல்லை.

இதையடுத்து விமான நிலையம் அமைக்க மத்திய அரசை தொடர்ந்து பல்வேறு அமைப்பினர் வலியுறுத்தி வந்தனர். கடந்த பிப்ரவரியில் தமிழகத்தில் உடான் திட்டத்தில் செட்டிநாடு உள்ளிட்ட 5 விமான நிலையங்கள் அமைக்கப்படும் என மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. தொடர்ந்து மார்ச்சில் தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம், விமான நிலைய நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

இந்நிலையில் காரைக்குடி தொழில் வணிக கழகத்துக்கு, தமிழக அரசின் தொழில் முதலீடு, மேம்பாடு மற்றும் வர்த்தகத் துறை செயலர் அருண்ராய் அனுப்பியுள்ள கடிதத்தில், 'செட்டிநாடு அருகே மதுரை, திருச்சி சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன. மேலும் செட்டிநாட்டில் தற்போது உள்ள ஓடுபாதை தரம், கட்டிடம் இல்லாததாலும் கருத்தில் கொண்டு அங்கு விமானம் நிலையம் அமைக்க சாத்தியமில்லை.

தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் மூலம் செட்டிநாடு ஓடுதளம் மேம்படுத்தப்பட்டு, விமானிகள் பயிற்சி மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்' என தெரிவித்துள்ளார். செட்டிநாட்டில் விமான நிலையம் அமைக்கப்படும் என மத்திய அரசு அறிவித்த நிலையில், தமிழக அரசு விமான நிலையத்துக்கு சாத்தியமில்லை என்று கூறியுள்ளதால் காரைக்குடி மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

இதுகுறித்து சமூக ஆர்வலர் ஆதிஜெகநாதன், தொழில் வணிக கழகத் தலைவர் சாமிதிராவிடமணி, செயலாளர் கண்ணப்பன், ஆகியோர் கூறியதாவது: நாங்கள் கடந்த 2023 மே 26ம் தேதி எழுதிய கடிதத்துக்கு தற்போது விமான நிலையம் அமைக்க சாத்தியமில்லை என்று அரசு செயலர் பதில் அனுப்பியுள்ளது வேதனையாக உள்ளது. விமானிகள் பயிற்சி மையத்தால் பொதுமக்களுக்கு எந்த பயனும் இல்லை. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## சசிகலாவை நான் சந்திக்கவில்லை: செங்கோட்டையன் மறுப்பு

திருப்பூர், செப்.05- அதிமுக மூத்த தலைவர் கே.ஏ.செங்கோட்டையன், நேற்று முன்தினம் ஈரோடு மாவட்டம் கோபியில் உள்ள கட்சி அலுவலகத்தில் கட்சியினருடன் 3 மணி நேரத்துக்கும் மேலாக ஆலோசனையில் ஈடுபட்டார். தொடர்ந்து 5ம் தேதி (நாளை) மனம் திறந்து செய்தியாளர்களிடம் பேச உள்ளதாகக் கூறி கட்சியில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளார்.

இந்நிலையில் கே.ஏ.செங்கோட்டையன், திருப்பூர் மாவட்டம் பெருமாநல்லூரில் நடந்த திருமண நிகழ்வில் பங்கேற்க நேற்று வந்தார். அப்போது செய்தியாளர்களிடம் அவர், "நான் சசிகலாவை சந்திக்கவில்லை," என்றார். "வேறு கட்சியில் இணைகிறீர்களா?" என கேள்விக்கு, நாளை அனைத்துக்கும் பதில் அளிப்பதாகத் தெரிவித்தார்.



## பள்ளிகொண்டா பேரூராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்
### மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பங்கேற்று சிறப்பு பார்வை

வேலூர், செப்.05-

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, பள்ளிகொண்டா பேரூராட்சி அலுவலகம் அருகில், சமுதாய கூடத்தில், 9 வார்டுகளின் பொது மக்களுக்கு, “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமை மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது பேரூராட்சி உதவி இயக்குனர் வேலூர் மண்டலம் தா.ஞானசுந்தரம், பள்ளிகொண்டா பேரூராட்சி மன்ற தலைவர் சுபபிரியா, பேரூராட்சி மன்ற துணை தலைவர் வசிம் அக்ரம், பேரூராட்சி செயல் அலுவலர் உமாராணி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், அணைக்கட்டு வட்டாட்சியர் வேண்டா உட்பட பலர் உடனிருந்தனர். இந்த முகாமில் வருவாய் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல வாழ்வுத்துறை, மின்சாரத்துறை, மகளிர் உரிமைத்துறை, பேரிடர் மேலாண்மை துறை, வேளாண்மை துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை உள்ளிட்ட அனைத்து குறைகள் சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் கலந்து கொண்டு கோரிக்கை மனுக்களை பெற்று இணையத்தில் பதிவேற்றம் செய்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து பதிவேற்றம் செய்த கோரிக்கை மனுக்களின் மீது தீர்வு காணும் விதமாக மனுதாரர்களுக்கு உரிய ஆவண ஆணைகளை வழங்கினர். முகாமில் மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் பயனாளிகள் என பலர் கலந்து கொண்டனர்.






## தேவகோட்டை ஆனந்தா கல்லூரியில் ஆசிரியர் தின விழா

தேவகோட்டை, செப்.05-

தேவகோட்டை ஆனந்தா கல்லூரியில் ஆசிரியர் தின விழா கல்லூரியின் செயலர் அருட்தந்தை முனைவர் செபாஸ்டியன், முதல்வர் அருட்தந்தை ஜார்ஜ் பெர்னாண்டஸ் ஆகியோர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு இயற்பியல் துறைத் தலைவர் முனைவர் திருமாமகள் வரவேற்புரை வழங்கினார். சிறப்பு விருந்தினராக தேவகோட்டை என். எஸ். எம். வி. பி. எஸ் மேல்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் திரு. வெங்கடாசலம் பேசுகையில், ஒவ்வொரு நாட்டின் எதிர்கால வளர்ச்சி அந்த நாட்டின் வகுப்பறையில் தான் உருவாக்கப்படுகிறது. ஒரு சிறந்த ஆசிரியரால் தான் உலகம் இன்றளவும் பல்துறை அறிஞர்களை பெற்றுக் கொண்டிருக்கிறது.

ஒரு மனிதனை அவனுக்கே அடையாளம் காட்டுபவராக இருப்பது தான் ஆசிரியரின் சிறப்புகளில் மிகவும் பிரதானமாக உள்ளது. மேலும் மாணாக்கர்கள் சமூகத்துக்கு தேவையான ஆற்றல், ஊக்கம், தன்னம்பிக்கை, விடாமுயற்சி என்று அனைத்தையும் ஒரு சேர கற்றுக்கொடுத்து நல்லவர்களாக, பண்புள்ள வனாக, சிறந்தவனாக, நாணயமானவனாக, அறிஞராக, மேதையாக சமூகத்தின் உயர்ந்த நிலைக்கு எடுத்து செல்லும் உயரிய பொறுப்பு ஆசிரியர்களித்தில் உண்டு. ஆகவே மாணாக்கர்கள் ஆசியர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடந்து வந்தால் வாழ்வில் உயர்ந்த இலட்சியத்தை அடையலாம் என்று எடுத்துரைத்தார். பின்பு மாணாக்கர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இறுதியா கணக்கியல் நிதித்துறைத் தலைவர் செல்வராணி ஏற்புரை வழங்கினார். மாணவி மோனிகா நன்றியுரை கூறினார். இந்நிகழ்வில் துணை முதல்வர்கள் அருட்தந்தை முனைவர் டென்சிங் ராஜன் மற்றும் முனைவர் விக்டர் பெனவெண்ட் ராஜ், கல்வி முதன்மையர்கள், இருபால் பேராசிரியர்கள், மாணாக்கர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாட்டினை கல்லூரியின் இயற்பியல் துறைப் பேராசிரியர்கள் செய்திருந்தனர்.

## விசாகப்பட்டினத்தில் 55 மீட்டர் நீளமுள்ள கண்ணாடி மேம்பாலம் விரைவில் திறப்பு

விசாகப்பட்டினம், செப்.05-

ஆந்திர மாநிலம், விசாகப்பட் டினத்தில் நகராட்சி வளர்ச்சிக் குழு சார்பில் கைலாசகிரி மலைப்பகுதியில் 55 மீட்டர் நீளமுள்ள கண்ணாடி மேம்பாலம் கட்டப்பட்டுள்ளது. இதற்கு விரைவில் திறப்பு விழா நடத்தி, பொதுமக்கள் அனுமதிக்கப்பட உள்ளனர்.



இது நாட்டிலேயே மிகவும் நீளமான கண்ணாடி மேம்பாலம் என பெயர் பெற்றுள்ளது. 100 பேர் வரை நின்றாலும் எந்த அசம்பாவிதமும் நடக்காது என கூறியுள்ளனர்.

ஆனால், ஒரே சமயத்தில் 40 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என கூறப்படுகிறது. இதன் மீது ஏறி நடந்தால், பலத்த காற்று வீசும். சுற்றிலும் மலைகளும் அதன் அழகும் நம்மை வெகுவாக ஈர்க்கும். மேலும், கீழே பார்த்தால் மிகப்பெரிய பள்ளத்தாக்குகள் நம்மை பயமுறுத்தும்.

## இந்துதிராவிடமக்கள்கட்சி இந்து திருக்கோயில்கள் பாதுகாப்பு கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற விநாயகர் விசர்ஜன ஊர்வல நிகழ்ச்சியில்
## செய்தியாளர்கள் சந்திப்பில் அனைத்து டாஸ்மாக் கடைகளை மூடுவதாக கூறிவிட்டு திமுக ஆட்சிக்கு வந்தவுடன் ஒரு டாஸ்மாக் கடைகளையும் மூடவில்லை என செய்தியாளர்களிடம் கேள்வி எழுப்பினார் இந்து திராவிட மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ரமேஷ்பாபுஜி

குரோம்பேட்டை, செப்.05-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டையில் இந்து திராவிட மக்கள் கட்சி சார்பில் தேசிய தலைவரும், நிறுவனருமான டாக்டர் ரமேஷ்பாபுஜி தலைமையில் விநாயகர் விசர்ஜன ஊர்வலம் நடைபெற்றது. விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக ஸ்ரீ திருப்பூர்கல்கிமகாலட்சுமி சுவாமிகள், அகில இந்திய இந்துக்கள்கட்சி தலைவர் செஞ்சிராஜா, அகில இந்திய இந்து மகாசபா தலைவர் கோடம்பாக்கம் ஸ்ரீ, அலெக்ஸிசுதாகர் வழக்கறிஞர் பிரிவு மாநில செயலாளர், இந்து பறையர் முன்னேற்ற கழகதலைர் இரா.ராஜசேகர், அகில பாரத இந்து மகாசேனா தலைவர் புகழேந்தி கலந்து கொண்டு விநாயகர்




சதுர்த்தி விழா முன்னிட்டு அமைக்கபட்ட 10 அடி உயர ஆபரேஷன் சிந்தூர் விநாயகர் சிலைகளுக்கு சிறப்பு பூஜை செய்து 500 க்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கி விநாயகர் சிலைகளை வாகனத்தில் ஏற்றி கொடிய சைத்து ஊர்வலத்தை துவக்கி வைத்தனர். குரோம் பேட்டையில் இருந்து 100க்கு மேற்பட்ட சிலைகள் ஊர்வலமாக வேளச்சேரி பிரதான சாலை வழியாக நீலாங்கரை கடற்கரையில் விசர்ஜனம் செய்திட இந்து இயக்க தலைவர்கள், ஆன்மீகவாதிகள், இந்து திருக்கோயில் பாதுகாப்பு கூட்டமைப்பு மற்றும் இந்து திராவிட மக்கள் கட்சி நிர்வாகிகள் ஏராளமனோர் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த டாக்டர் ரமேஷ்பாபுஜி பேசுகையில் 30க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் இருந்து 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட சிலைகள் இரண்டு நாட்களாக கடலில் கரைக்கபட்டன. குரோம்பேட்டையில் 100க்கும் மேற்பட்ட சிலைகள் நிலாங்கரை கடற்கரையில் கரைக்கபடும் எனவும் தமிழக அரசு விநாயகர் சதுர்த்தி விழாவை அரசு விழாவாக நடத்தபட வேண்டும் மஹாராஸ்டிரா மாநிலத்தை போல அரசு விழாவாக கொண்டாட பட வேண்டும் என்றும் திமுக ஆட்சிக்கு வந்த பிறகு ஒரு டாஸ்மாக் கடைகள் கூட முடபடவில்லை எனவும் விநாயகர் சதுர்த்தி விழாவிற்கு வாழ்த்து சொல்லாமல் தமிழகமுதல்வர் இருப்பது அடுத்து வரும் ஆட்சியில் சிம்மாசனத்தில் அமர வைக்கமாட்டார் விநாயகர் எனவும் அடுத்த ஆட்சியில் பா.ஜா.க அல்லது இந்து இயக்கங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்த நாட்டுக்கு உழைத்த தலைவர்கள், அரசர்களின் சிலைகள் வைக்கபடும் மெரினா கடற்கரையில் அமைக்கப்படும் என செய்தியாளர்கள் சந்திப்பில் இந்து திராவிட மக்கள் கட்சி தெரிவிக்கப்பட்டது

## இரண்டாம் நிலை காவலர் ஆயுதப்படை, சிறைக் காவலர், தீயணைப்பாளர் பதவிகளுக்கு எழுத்துத் தேர்வு 09.11.2025 அன்று நடைபெறும்

தேனி, செப்.05-

தமிழ்நாடு அரசு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தால் அறிவிக்கப்பட்டுள்ள பத்தாம் வகுப்பு கல்வித்தகுதிக்கான இரண்டாம் நிலை காவலர் ஆயுதப்படை, சிறைக் காவலர், தீயணைப்பாளர் பதவிகளுக்கு மொத்தம் 3665 காலியிடங்களுக்கான எழுத்துத் தேர்வு 09.11.2025 அன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தேர்வுக்கு விண்ணப்பிக்க கடைசி தேதி 21.09.2025 ஆகும். எனவே தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் www.tnsurb.tn.gov.in <http://www.tnsurb.tn.gov.in/> என்ற இணையதள முகவரி வாயிலாக விண்ணப்பம் செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இத்தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் தேனி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய வளாகத்தில் சிறந்த வல்லுனர்களைக் கொண்டு வருகின்ற 08.09.2025 திங்கள் கிழமை முதல் துவங்கப்பட உள்ளது. இப்பயிற்சியின் போது இலவச பாடக்குறிப்புகள், ஒவ்வொரு பாடத்திற்கும் மாதிரி தேர்வுகள், நடத்தப்படும். மேலும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் இணையதளமான tamilnaducareerservices.tn.gov.in என்ற இணையதளத்தில் அனைத்து விதமான போட்டித் தேர்வுகளுக்கும் இலவச பாடக்குறிப்புகள், ஆன்லைன் மாதிரி தேர்வுகள் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது.

தேனி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தால் நடத்தப்பட்ட இலவச பயிற்சி வகுப்பில் பயின்று கடந்த மூன்றாண்டுகளில் 48 நபர்கள் வெற்றி பெற்று காவல் துறையில் இரண்டாம் நிலை காவலர்களாக பணியாற்றி வருகின்றனர்.

இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள இரண்டாம் நிலை காவலர் தேர்வுக்கு விண்ணப்பம் செய்த விண்ணப்ப நகல், பாஸ்போர்ட் சைஸ் போட்டோ ஆகியவற்றுடன் தேனி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நேரிலோ அல்லது 63792 68661 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு பயிற்சியில் சேர்வதை உறுதி செய்து கொள்ளலாம். இரண்டாம் நிலை காவலர் தேர்வுக்கு விண்ணப்பித்துள்ள தேர்வர்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத்சிங் இ.ஆ.ப. அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.




## மண்ணிவாக்கம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மேலாண்மை குழு சார்பில் ஆசிரியர் தின விழா

மண்ணிவாக்கம், செப்.05-

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட மண்ணிவாக்கம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மேலாண்மை குழு சார்பில் ஆசிரியர் தின விழா பள்ளி மேலாண்மை குழு தலைவர் ஆர்.அனு, துணைத் தலைவர் எஸ்.சங்கீதா, ஆகியோர் தலைமையில் நடைபெற்றது

இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மண்ணிவாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.கெஜலட்சுமி சண்முகம், துணைத் தலைவர் சுமதி லோகநாதன், 4வது வார்டு உறுப்பினர் உஷா பிரபு, ஆகியோர் கலந்து கொண்டு இந்தப் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர் ஆசிரியர்களுக்கு பள்ளி மாணவ மாணவிகள் பூங்கொத்து கொடுத்து அதனைத் தொடர்ந்து மேலாண்மை குழு உறுப்பினர்கள் சால்வை அணிவித்து மரியாதை செலுத்தி வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டனர் இந்நிகழ்ச்சியில் பள்ளி மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்

அதனைத் தொடர்ந்து பள்ளி மாணவ மாணவிகளுக்கு சர்க்கரை பொங்கல் வழங்கப்பட்டது

இறுதியில் தலைமை ஆசிரியர் ஜான்சி ராணி மேலாண்மை குழு அனைத்து நிர்வாகிகளுக்கும் நன்றிகளும் பாராட்டுகளும் தெரிவித்தார்



## ஆயக்குடியில் விசிக கவுன்சிலர் தலைமையில் பூமி பூஜை விழா நிகழ்ச்சி நடைபெற்றன

திண்டுக்கல், செப்.05-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அடுத்த ஆயக்குடி பேரூராட்சிக்கு உட்பட்ட 16வது வார்டு பகுதியில் அங்கன்வாடி கட்டிடம் சேதமடைந்த நிலையில் புதிய கட்டிடம் கட்ட வேண்டும் என்று அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்த நிலையில் பழுதடைந்த கட்டிடம் அகற்றப்பட்டனர்.

இந்நிலையில் அப்பகுதி விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் கவுன்சிலர் சரஸ்வதி வாஞ்சிநாதன் தலைமையில் பொது மக்கள் ஒன்று கூடி பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ. செந்தில் குமாரிடம் கோரிக்கை வைத்தனர்.

இதனை ஏற்று உடனடியாக புதிய ஒருங்கிணைந்த அங்கன்வாடி மையய கட்டிடம் கட்டுவதற்காக 15 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தனர். தொடர்ந்து 16வது வார்டு பகுதியில் புதிய ஒருங்கிணைந்த அங்கன்வாடி கட்டிடம் கட்டுவதற்கான பூமி பூஜை விழா நிகழ்ச்சி கவுன்சிலர் சரஸ்வதி வாஞ்சிநாதன் பேரூர் செயலாளர் சின்னத்துரை ஆகியோர் தலைமையில் நடைபெற்றன

மேலும் இந்நிகழ்வில் தலைவர் மேனகா ஆனந்தன் துணைத் தலைவர் சுதமணி கார்த்திகேயன் ஒப்பந்ததாரர் முருகானந்தம், தங்கவேல், வாஞ்சிநாதன், முருகேசன், கவிதா மணி, காட்டப்பன், கருப்புசாமி, குமரேசன், கிட்ணன், முருகானந்தம், ராஜவேல், அருளானந்தம், மற்றும் பேரூராட்சி ஊழியர் ஜெகதீஷ், கோபால் மற்றும் பள்ளி ஆசிரியர் தேவி கன்னிகா உள்ளிட்டோர் கலந்து கொண்டு புதிய ஒருங்கிணைந்த அங்கன்வாடி மையய கட்டிடம் கட்டுவதற்கான பூமி பூஜை விழா நிகழ்ச்சி வெகு விமர்சையாக நடைபெற்றன

தொடர்ந்து 16வது வார்டு பகுதியில் மக்களின் அடிப்படை தேவைகளை உணர்ந்து அதற்கான நிதி ஒதுக்கீடு செய்து அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தித் தரும் பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ. செந்தில்குமாருக்கு அப்பகுதி கவுன்சிலர் மற்றும் பொதுமக்கள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டனர்



## மறைமலைநகர் நகராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்
### அமைச்சர் தா.மோ.அன்பரசன் மாவட்ட ஆட்சித் தலைவர் சினேகா பங்கேற்பு

செங்கல்பட்டு, செப்.05-

உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் மறைமலைநகர் நகராட்சியில் நடைபெற்றன இதில் அமைச்சர் தா.மோ. அன்பரசன் மாவட்ட ஆட்சித் தலைவர் சினேகா பங்கேற்றனர். செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகர் நகராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நகராட்சிக்கு உட்பட்ட சமுதாய நலக் கூடத்தில் நடைபெற்றது. இதில் செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன் தலைமை தாங்கினார். செங்கல்பட்டு சார் ஆட்சியர் எஸ்.மாலதி ஹெலன், நகர மன்ற தலைவர் ஜெ.சண்முகம், வட்டாட்சியர் ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முகாமிற்கு சிறப்பு விருந்தினராக மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மாவட்ட ஆட்சித் தலைவர் சினேகா ஆகியோர் கலந்து கொண்டு முகாமை துவக்கி வைத்து பல்வேறு நலத்திட்ட உதவிகள் மற்றும் பயனாளிகள் அளிக்கப்பட்ட மனுவை துறை சார்ந்த அதிகாரிகளிடம் கேட்டறிந்து உடனடி தீர்வு காணப்பட்டு ஆணையினை வழங்கினார்கள். முகாமில் 15 க்கு மேற்பட்ட துறைகள் மூலம் சேவைகள் செய்யப்பட்டது. இதில் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் நகர மன்ற உறுப்பினர்கள், மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161